# கள்ளர் பட்டப் பெயர்களும் அரச மரபினரும்

தமிழக வரலாற்றில் மிகத்தொன்மையான காலம் முதற் கொண்டு சிறப்புற்று விளங்கும் குடிகளுள் இன்று தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் நெல்லை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வாழும் கள்ளர்குடி தனிச் சிறப்புடையதாகும். இக்குடியினர் தம் இயற்பெயரோடு யாதானுமொரு பட்டப் பெயரைக் கொண்டு விளங்குகின்றனர். இத்தகைய 348 பட்டங்களை நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தம் 'கள்ளர் சரித்திரம்' என்னும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவர்கள் தரும் பட்டியலிற் காணாத வேறு பல பட்டங்களும் வழக்கிலுள்ளன. இப்பட்டங்கள் வரலாற்றுத் தன்மை கொண்டவையாகும். இவ்வினப் பெருமக்கள் தமிழகத்தின் பகுதிகளை ஆண்ட பல்வேறு அரச மரபினரோடும் தொடர்புடையார் என்பதனை இப்பட்டப்பெயர்கள் ஐயத்திற்கு இடமின்றி நிறுவுகின்றன. கள்ளர் பெருமக்கட்கு இந் நாளில் வழங்கும் பட்டங்களிற் பல இடைக் காலத்தில் தென்னகம் முழுவதனையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டு ஆட்சி புரிந்த சோழ மன்னர் வெளியிட்ட கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. பல பட்டங்கள் சிறிதும் மாற்றமின்றியும், சில பட்டங்கள் சிறிது மாற்றத் தோடும் காணப்படுகின்றன. சோழ மன்னர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களைத் தம் அரசியலில் உயரதிகாரிகளாகக் கொண்டிருந் தனர். அவர்களே கல்வெட்டுக்களில் கையொப்பமும் மேலொப்பமும் இட்டுள்ளனர். தம் கீழ்ப் பணியாற்றிய அதிகாரிகளின் அருஞ் செயல் களைப் பாராட்டி அவர்கட்கு உயரிய பட்டங்களை வழங்குவது மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டது பெரியபுராண ஆசிரியர் சேக்கி ழார்க்கு 'உத்தம சோழப் பல்லவராயன்' என்னும் பட்டம் வழங்கப் பட்டது. முதலாம் பராந்தகனுக்கு உதவியாக இருந்த கங்க மன்னன் இரண்டாம் பிரிதிவிபதிக்கு அவன் வாணர்களின் தலைவன் என்பத னை உணர்த்தும் வகையில் வாணாதிராயன் என்னும் வீர விருது வழங்கப்பட்டது. இங்ஙனமே தென்னவன் மூவேந்த வேளான், இராசராசக் காடவராயன், ஆளப் பிறந்தான் முதலான பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகு பட்டங்களைப் பெற்றோரின் கால்வழி யினரும் தொடர்ந்து அவ்விருதுகளை ஆண்டு வந்துள்ளனர் எனத்

# கள்ளர் பட்டப் பெயர்களும் அரச மரபினரும்.



பேராசிரியர் A. தட்சிணாமூர்த்தி, B. A(Hons) B. Ed., M. Phil.,
அ. வீ. வா. நி. திரு. புட்பம் கல்லூரி,
பூண்டி-613 503.

தெரிகின்றது. சோழ மண்டலத்திற் காணப்படும் கல்வெட்டுக்களில் எண்ணற்ற அதிகாரிகள் இடம் பெறுகின்றனர். அவர்கட்கு வழங்கிய பெயர்களுள்பல இன்று கள்ளர்குடியினர்க்கு வழங்கு தலைப் பின்னர் இணைத்துள்ள பட்டியல் காட்டும்.

சோழ மன்னர்கள் ஈழ நாட்டையும், கொங்கு நாட்டையும், கங்க நாட்டையும், கலிங்கம், கடாரம், கொல்லம், மண்ணைக் கடக்கம், முதலான நாட்டுப் பகுதிகளையும் வென்று தம் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர் என வரலாறு கூறுகின்றது. ஈழத்தரையர், ஈழமுண்டார், கொல்லத்தரையர், கொல்ல முண்டார் கொங்கரையர், கங்க நாட்டார், சோழ கங்க நாட்டார், சோழங்கத் தேவர், கலிங்கராயர், கடாரத்தலைவர், கடாரம் தாங்கியார், மண்ணையார் என்னும் பட்டங்கள் கள்ளர் குடியார்க்கும் மேற் கண்ட வெற்றிகட்கும் உள்ள உறவைக் காட்டுகின்றன.

முதலாம் இராசராசன் சிங்களரை வென்று சிங்களாந்தகன் என்றும், கேரளரை வென்று கேரளாந்தகன் என்றும் பெயர் பெற்றான். சிங்களராயர், சிங்களேந்தியார், கேளராயர் என்னும் கள்ளர் பட்டப் பெயர்கள் இராசராசன் காலத்தில் வழங்கப்பட்ட பட்டங்கள் என்பதில் ஐயமில்லை.

பட்டியலில் காணும் பல்லவராயர், பல்லவாண்டார், கச்சிராயர், காடவராயர், காடு வெட்டியார் முதலான பட்டங்கள் கள்ளர்களைப் பல்லவரோடு உறவுபடுத்துகின்றன.

கொடும்புராயர் என்னும் பட்டமும் அண்ணவாசல்ராயர் என்பதும், இருங்கோளர் என்பதும் கொடும்பாளூர் என்னும் கொடும்பையை ஆண்ட வேளிர்களோடு இவர்களை உறவு படுத்து கின்றன.

கோவலூர் என்பது இன்று திருக்கோவலூர் என்று வழங்கு கிறது. இது ஈராயிரமாண்டுகட்கு முன்பு மலையமான்களால் ஆளப் பட்டது. மலையமான் திருமுடிக்காரி இக்குடியிற் பிறந்த வள்ளலா வான். கோவலராயன் என்று இப்பகுதியை ஆண்டோர் குறிக்கப்

பட்டுள்ளனர். கள்ளரில் கோபாலர் என்னும் பட்டமுடையாரும், மலையமான் பட்டமுடையாரும் இக்குடியினராதல் தெளிவு.

விசயாலயச்சோழனும் அவன் மகன் முதலாம் ஆதித்தசோழனும் தஞ்சையை முத்தரைய மன்னன் ஒருவனிடமிருந்து கைப்பற்றினர். இவர்கள் தஞ்சை, செந்தலை. திருக்காட்டுப்பள்ளி முதலிய பகுதிகளைச் சிறப்புடன் ஆண்ட மரபினர். நாலடியாரின் இரு செய்யுட்கள் (200, 296) இம்மரபினரின் கொடை வளத்தைப் பாராட்டுகின்றன. செம்பிய முத்தரையன், மான முத்தரையன், வங்கார முத்தரையன் என்னும் கள்ளர் பட்டப் பெயர்கள் முத்தரையர்க்கும் கள்ளர்க்கும் உள்ள உறவைக் காட்டும். அறிஞர் மு. இராகவய்யங்கார் இக்கருத்துடையவரே. நாட்டாரவர்களும் இக்கருத்தை உடன்படுகிறார்கள்.

'செம்பியர்' என்பது சோழர்க்குரிய பட்டமாகும். சோழ முத்தரையன் என்று கல்வெட்டிற் காண்பது கள்ளர் பட்டப் பெயரில் செம்பிய முத்தரையர் என்றுள்ளது. வங்காரம் என்பது பங்காரு என்னும் தெலுங்குச் சொல்லின் தமிழ் வடிவம். இது 'பொன்' என்னும் பொருள் கொண்டதாகும். தமிழகத்தின் வடபகுதியில் காணப்படும் முத்தரையர் கல்வெட்டுக்களில் அம்மரபு மன்னர் பெயர்க்கு முன்னால் பொன் என்னும் அடைமொழி காணப்படுகிறது. (நடன. காசி நாதன், முத்தரையர், ப 18) மான முத்தரையர் என்பதிலுள்ள 'மான' என்னும் அடைமொழிக்குப் பெருமை என்பது பொருளாகும், நாலடியார் இவர்களைப் பெருமுத்தரையர் என்று பாராட்டுதலை இதனோடு இணைத்துக் காணலாம்.

சேதி நாடென்பது இன்றையத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ளது. இப்பகுதியைப் பல்லவர் கால முதல் சேதிராயர்கள் ஆண்டனர். மெய்ப்பொருள் நாயனார் இம்மரபினரேயாவார். பட்டியலில் காணும் சேதிராயன் என்னும் பட்டம் மாற்றமின்றி வழங்கக் காணலாம். சேதிராயர்கள் மிகுதியாக வாழ்கிற சிற்றூர் சேதிராயன் குடிகாடு என்று வழங்குகின்றது. சோழர் கல்வெட்டுக்களில் பல சேதிராயர்கள் இடம் பெறுகின்றனர்.

இன்று தருமபுரியென வழங்கும் ஊர் சங்க காலத்தில் தகடூராக இருந்தது. இதன் தலைவன் அதியமான் நெடுமானஞ்சி யாவான். கடையெழுவள்ளல்களுள் ஒருவனான அதியமான் மரபினர் மிகப்பிற் காலத்திலும் ஆண்டுள்ளனர். இம்மரபினர் கள்ளர் இனத்தில் கலந்துள்ளமையை அதியமார் என்னும் பட்டத்தால் அறியலாம்.

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கொடும்பாளூரை ஆண்டோர் இருக்கு வேளிர்களாவர். இவர்கள் சோழருக்குப் பெண் கொடுக்கும் உரிமை கொண்டோராவர். சுந்தர சோழன் காலத்தில் படைத்தள பதியாக இருந்து ஈழத்தை வென்று அப்போரில் உயிர் நீத்த பெருமை கொடும்பாளூர்க் குறுநிலமன்னர் பராந்தகன் சிறிய வேளாரைச் சாரும். கொடும்பாளூரைக் கல்வெட்டுக்கள் கொடும்பை எனக் குறிக்கின்றன. கொடும்பைராயர் என்னும் பட்டம் இன்று கொடும்புராயர் எனச் சிறிது மாறி வழங்குகிறது. மேலும் இருங்கோ வேளார் என்னும் இவர்கட்குரிய பெயர் இன்று இருங்களார் என்று வழங்கி வருகிறது. அண்ணவாயில் பகுதியும் இவர்கட்குரியதே யாகும். அண்ணவாசல்ராயர் என்னும் பட்டம் இப்பகுதிக்கும் கள்ளருக்குமுள்ள உறவைக் காட்டும் பூவனைக்குடி என்பது புதுக் கோட்டைப் பகுதியிலுள்ளது. பூதிகளறிஅமருன்றி என்னும் முத்தரைய மன்னன் இங்குப் புட்பவனேசுரருக்கு ஒரு கோயிலைக் குடைவிந்திருக்கிறான். பூனையர் என்னும்பட்டம் பூவனையரையர் என்பதன் திரிபாக விருக்கப் பெரிதும் இடமுண்டு.

வடக்கிலுள்ள பாலாற்றுக்கரையில் ஆண்டோர் தம்மை வாணாதிராயர் என்றும், மகாபலியின் மரபினர் என்றும் சொல்லிக் கொண்டனர். மகாபலி வாணாதிராயர் என்பது அவர்களுக்கு வழங்கிய பெயராகும். வாணாதிராயன் பட்டினம் என்றோர் ஊரும் வழங்குவது காணலாம். கள்ளருள் மாவலியாரும், வாணாதிராயரும் காணப்படுகின்றனர். மேலும் பாலியார், பால் நாட்டார், பாலாண் டார் என்னும் பட்டப் பெயர்களும் இவர்கட்கு மகாபலி வாணாதி ராயரோடுள்ள தொடர்பை விளக்க வல்லனவாகும்.

கள்ளர் பட்டப் பெயருள் பதுங்கராயர் என்பதும் ஒன்றாகும். இது வேறொரு பட்டத்தின் திரிபாகவே தோன்றுகின்றது. வைதும்ப

ராயர் என்பதன் திரிபான வைதுங்கராயர் என்பது மேலும் திரிபுற்றுப் பதுங்கராயர் என்றாகியுள்ளதாகத் தெரிகின்றது. வைதும்பர் — வைதுங்கர் — பைதுங்கர் — பதுங்கர் இது தமிழில் பொதுவாகக் காணத்தக்க வகர பகர மாற்றத்தோடு இணைத்துக் காணத்தக்கதாகும். வைதும்பர் அல்லது வைதுங்கர் என்போர் ரேணாண்டு ஏழாயிரம் என்னும் தெலுங்கு நாட்டை யாண்ட குறுநில மன்னராவர். இவர்கள் வாணகோ வரையரின் துணைவர்கள். முதலாம் பராந்தகன் காலத்தில் அவனால் வெல்லப் பட்டோருள் வைதும்பராயரும் அடங்குவர். சுந்தர சோழன் வைதும்ப நாட்டு இளவரசி கல்யாணியின் மகள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சோழர் கல்வெட்டுக்களிற் காணப்படாத வேறு பல பட்டப் பெயர்களும், கள்ளர்கட்கு அரச மரபினரோடுள்ள தொடர்பை மெய்ப்பிக்க வல்லனவாகவுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டமும் அதற்கு வடக்கே வேங்கடமலை வரையுள்ள பகுதியும் முறையே அருவாநாடு, அருவா வடதலை நாடு என்று பெயர் பெற்றன. அருவா நாட்டார், அருவாத்தலைவர் என்னும் பட்டங்கள் கள்ளர்க்கு வழங்குதலை நோக்க, தமிழகத்தின் வட வெல்லையை ஆண்டோருக்கும் இவ்வினத்தோருக்குமுள்ள உறவு விளக்கமாகிறது. அரசாண்டார், ஆட்சிப்பிரியர் என்னும் பட்டங்கள் நாட்டாட்சியைச் சுட்டக் காணலாம்.

தொண்டைநாடு வடமொழியில் துண்டராட்டிர மெனப்படும். அப்பகுதியை ஆண்டோரைத் துண்டீரராயர் என்று குறித்துள்ளனர் தொண்டைமான், தொண்டார் என்னும் பட்டங்கள் தொண்டை நாட்டுத் தொடர்பைக் காட்டும். கருணாகரத் தொண்டைமான் வண்டையர் கோன் என அழைக்கப்பட்டமையும், வல்லம் என்னும் தென்னார்க்காட்டுப் பகுதியை ஆண்டவன் வல்லவரையன் வண்டையத்தேவன் எனப்பட்டதும் காணலாம். வாண்டையார் என்னும் பட்டம் வண்டையர் என்னும் பெயரின் திரிபென்பது காணத்தக்கதாகும்.

கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் குடந்தையை அடுத்துள்ள திருப்புறம்பியத்தில் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் இடையே நிகழ்ந்த போரே விசயாலயன் மரபு வீறு கொண்டெழத்தக்க சூழலை ஏற்படுத்தியது. புறம்பயத்தார் என்னும் பட்டம், இவ்வெற்றியை நினைவூட்டக் காணலாம்.

திருமுனைப்பாடி நாட்டைப் பல்லவர் காலத்திலாண்டவர் முனையர் மரபினரான நரசிங்க முனையரையர். சுந்தர மூர்த்தி சுவாமிகளை மகன்மை கொண்டு வளர்த்தவர் இவரேயாவர். முனையதிரியர் என்னும் பட்டம் கொண்டோர் இவர் மரபினரேயாவர்.

சங்க காலத்திலேயே மழவர் என்னும் மறக்குடியினர் பரக்கம் பேசப்படுகின்றனர். அதியமான் மழவர் குடியினன் என்று கூறுவர் வரலாற்றறிஞர். சேரநாட்டோடு தொடர்பு கொண்ட பழுவூர்ச் சிற்றரசர்கள் பழுவேட்டரையர் எனப்படுவர். சோழர்காலத்தில் சிறப்புற்று விளங்கிய பழுவேட்டரையன் மகளே கண்டராதித்த சோழரின்மனைவியார் செம்பியன்மாதேவியார். மழவராயன் நல்லூரும், திருமழபாடியும் மழவர் பெருமையைக் காட்ட வல்லனவாகும். மழவராயர் என்பது கள்ளர் பட்டங்களுள் ஒன்றாகும்.

கள்ளர் பட்டப்பெயர்களில் நூற்றுக்கு மேற்பட்டவை சோழர் கல்வெட்டுக்களில் காணப்படுதலும், சோழர் வென்றடக்கிய நாடுகளின் பெயர்களோடு பல பட்டங்கள் தொடர்பு கொண்டிருப்பதும் மிகவும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.சோழ மன்னரின் வெற்றிக்கு இக்குடியினர் பெரிதும் காரணமாக இருந்தமை பட்டப்பெயர்களால் விளக்கமாகின்றது. இப்பட்டங்களில் சில மன்னர்கட்கே உரியனவாகும். உய்யக் கொண்டான், முடி கொண்டான், கடாரம் கொண்டான், கேரளாந்தகன்,சிங்களாந்தகன் முதலானவை அத்தகையனவாகும்.

சோழ மன்னர்கள் கங்கபாடியையும், வேங்கி நாட்டையும் கூர்ச்சரப் பகுதியையும், இலங்கையையும் பிற பகுதிகளையும் வென்றனர். தாம் பெற்ற வெற்றியைக் குறிக்கும் வகையில் சோழ கங்கன், கன்னக் குச்சியராயன் என்றவாறு பெயர் பூண்டனர்.

சோழகங்கத்தேவர், சோழகங்க நாட்டார், குச்சியராயர் போன்ற பட்டங்கள் இதனை விளக்குகின்றன. வேங்கி நாட்டுத் தொடர்பை வேங்கிராயர் பட்டமும், மானிய கேடமான மண்ணைக் கடக்கத் தொடர்பினை மண்ணையாரும், மாபப்பாள வெற்றியைப் பம்பாளியாரும், அருமண தேச வெற்றியை அருமை நாட்டாரும், ஸ்ரீ விசய வெற்றியை விசயராயரும், விசயத்தேவரும் காட்டுகின்றன.

சோழர்களின் வீழ்ச்சிக்காலத்தில் பாண்டியர் சோழ நாட்டின் மேல் படையெடுத்து வந்தனர். தஞ்சையும் உறையூரும் தீக்கிரையாக்கப்பட்டன. பழையாறையில் பாண்டியன் சோணாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். தன்னைச் ‘சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவன்’ என அழைத்துக் கொண்டான். பழையாறைக்கண்மையில் உள்ள இராசாக்கள் இருப்பு என்னும் சிற்றூரில் வாழும் கள்ளர் குடியினருள் ஒரு சாரார் ‘சோணாடு கொண்டார்’ என்னும் பட்டம் கொண்டுள்ளனர், இவர்கள் பாண்டிய நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவராதல் தகும்.

சோழராட்சிக் காலத்தில் தமிழகத்தில் மைசூரைச் சார்ந்த வல்லாளர் என்னும் அரச மரபினரின் செல்வாக்கு மிகுந்திருந்தது. சமயபுரமென்னும் கண்ணனூர் மைசூர் ஒய்சாளரான வல்லாளரின் தலைநகரமாக இருந்தது, மன்னை இராசகோபால சுவாமி திருக்கோயிலில் வல்லாள இராசன் மண்டபம் உள்ளது. கள்ளர் பட்டப் பெயர்களுள் வல்லாளத்தேவர் என்பதும் ஒன்றாகும். இது கள்ளருக்கும் ஒய்சாளர்க்கும் உள்ள உறவைக் காட்டுகிறது எனலாம்.

விசய நகரவேந்தர் அச்சுதராயர் காலத்தில் அவருக்கு அடங்கிய பாண்டியனைத் தாக்கிச் சேரனொருவன் மதுரையைக் கைக்கொண்டான். தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்த பல்லவ குலச் சிற்றரசனொருவன் தொண்டைமான் பட்டத்துடன் விளங்கினான். அச்சுதராயரின் கட்டளையினை ஏற்றுச் சேரன் மீது படையெடுத்துச் சென்று அவனை வென்றான்; வழுதியாகிய பாண்டியனை மீண்டும் மதுரைத் தலைவனாக்கினான். அவனுக்கு **வழுதி மானம் காத்தான்** என்னும் விருது வழங்கப்பட்டது. மானம் காத்தார் என்னும் பட்டம் இவனை நினைவு கூர உதவுகின்றது.

பொன்னமராவதியில் மானம் காத்தான் கோயில் உள்ளதாகவும் அறிய முடிகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள எடமேலையூரிலும் வேறு சில வூர்களிலும் சாளுவர் என்னும் பட்டமுடையார் வாழ்கின்றனர். தெலுங்கு நாட்டையாண்ட சாளுக்கியர்கட்கும் சோழர்கட்குமுள்ள உறவை வரலாறு காட்டுகின்றது. கள்ளருள் சாளுவர் பட்டம் கொண்டோர் சாளுக்கியர்களையோ, விசய நகர அரச மரபினருள் ஒரு பிரிவினரான சாளுவரையோ நினைவூட்டு கின்றனர்.

சில பட்டப்பெயர்கள் மட்டுமே இங்கு ஆயப்பட்டன. ஏனைய பட்டப் பெயர்களையும் இங்ஙனம் ஆய்ந்தால் தமிழக வரலாற்றில் கள்ளருக்குள்ள நெருக்கமான உறவை மேலும் தெளிவாக உணரலாம்.

சங்ககாலம் முதற்கொண்டு மிகப் பிற்காலம் வரையில் இம் மரபினர் நாட்டாட்சியோடு தொடர்பு கொண்டு விளங்குகின்றனர். முத்தரையர், சேதிராயர், மலையர், பழுவேட்டரையர், மழவர், பல்லவர், வாணாதிராயர், சோழர், போசளர், சாளுக்கியர், கங்கர் முதலான பலரோடும் இவர்கட்குக் குருதித் தொடர்பு இருந்திருக்க இடமுண்டு. இப்பட்டங்களிற் சில தமிழகத்தில் பெருமளவில் வாழும் வன்னியர்க்கும் வழங்குகிறது. இதன் வரலாற்றையும் நன்கு ஆராய வேண்டியுள்ளது. முத்தரையருக்கும் இன்றைய முத்திரியர்க்கும் உள்ள உறவையும் கள்ளருக்கும் இவர்கட்குமுள்ள உறவையும் மேலும் ஆராய வேண்டியுள்ளது.

# இடைக் காலச் சோழர் கல்வெட்டுக்களில் கள்ளர் பட்டப் பெயர்கள்

| | கல்வெட்டில் உள்ளவை | கள்ளர் பட்டப் பெயர்கள் |
|---|---|---|
| 1. | அங்கராசன் | அங்கராயர் |
| 2. | அண்ணவாசலுடையார் | அண்ணவாசல்ராயர் |
| 3. | அதியமான் | அதியமார் |
| 4. | அத்தாணி | அத்தாணியார் |
| 5. | அமரகோன் | அமரகொண்டார் |
| 6. | அம்பலத்தாடி | அம்பலத்தார் |
| 7. | அலங்காரப்பிரியன் | அலங்காரப் பிரியர் |
| 8. | அத்திப்புலியூருடையான் | அத்திரியர் (அத்திராயர் / அத்தி அரையர்) |
| 9. | ஆளப்பிரியன் | ஆளற்பிரியர், ஆலம் பிரியர் |
| 10. | இருங்கோளர் | இருங்களார் |
| 11. | ஈழங்கொண்ட நாடாள்வான் | ஈழ முண்டார், ஈங் கொண்டார் |
| 12. | ஈழத்தரையன் | ஈழத்தரையர் |
| 13. | உத்தரங்குடியான் | உத்தமுண்டார் |
| 14. | உய்யக் கொண்டான் | உய்யக் கொண்டார் |
| 15. | உலகாளுடையான் | உலகம் காத்தார் |
| 16. | உலகுடையான் | உலகுடையார் |
| 17. | உழுதான் | உழுவாண்டார் |
| 18. | ஊரான் கிழான் | ஊரான் பீலியர் |

| | | |
|---|---|---|
| 19. | ஊரத்தி | ஊரத்தியார் |
| 20. | ஏனாதி அரையன் | ஏனாதியார் |
| 21. | ஐந்நூற்றுவன் | ஐந்நூற்றுப் பிரியர் |
| 22. | ஐயப்பிள்ளை | அரிய பிள்ளை |
| 23. | ஒளிமதியார் | ஒளிராயர் |
| 24. | கச்சிராயன் | கச்சிராயர் |
| 25. | களப்பாளராயன் | களப்பாடியார், களப்பிலார் |
| 26. | கங்கப்பிள்ளை | கண்டப்பிள்ளை |
| 27. | கடக்கம் கொண்ட சோழர் | கொடிக்க முண்டார் (கடக்கம் கொண்டார்) |
| 28. | கடாரத்தரையன் | கடாரத் தலைவர் |
| 29. | கனகராயன் | கனகராயர் |
| 30. | கரம்பியம் | கரம்பியத்தார் |
| 31. | கருப்புடையான் | கருப்புளார், கருப்பூரார் |
| 32. | கலியன் | கலியனார் |
| 33. | கவாலி | காவாலியார் |
| 34. | களக்குடியான் | காலாக் குடியார் |
| 35. | கற்குடையான் | கக்கொடையார் |
| 36. | கங்கநாடாள்வான் | கங்கநாட்டார் |
| 37. | கரடி | கருடியார் |
| 38. | காடவதரையன், காடவராயன் | காடவராயர் |
| 39. | காங்கேயராயன் | காங்கேயர் |
| 40. | காலிங்கராயன் | காலிங்கராயர் |
| 41. | காவர் காச்சி | காரைக்காச்சியார் |

| | | |
|---|---|---|
| 42. | காடுவெட்டி | காடுவெட்டியார் |
| 43. | கிளாக்குடையான் | கிளாக்குடையார் |
| 44. | கிளாவன் | கிளாவர் |
| 45. | குமரந்தை | குமறண்டார் |
| 46. | குறுக்கை உடையான் | குறுக்கண்டார் (குறுக்கை யாண்டார்) |
| 47. | கேரளராயன் | கேளராயர் |
| 48. | கொண்டராயன், கொண்டையன் | கொன்றையர் |
| 49. | கொடும்பைராயன் | கொடும்புராயர் |
| 50. | கொல்லத்தரையன் | கொல்லத்தரையர், கொல்ல முண்டான் |
| 51. | கோவலராயன் | கோபாலர் |
| 52. | சாமநாயக்கன் | சோமண நாயக்கர் |
| 53. | சிக்கருடையான் | சிக்கராயர் |
| 54. | சிங்களராயன் | சிங்கராயர், சிங்கப்பீலியர் |
| 55. | சிங்களாந்தி | சிங்களேந்தியார், சங்கேந்தியார் |
| 56. | சிறுப்பைராயன் | சிலுப்பியார் |
| 57. | சிற்றாடி | சிற்றாட்சியார் |
| 58. | சீனத்தரையன் | சீனத்தரையர் |
| 59. | செம்பங்குடையான் | செம்பர் (செம்பியர் ?) |
| 60. | செம்மை கொண்டான் | செம்மை கொண்டார் |
| 61. | சென்னிப்பேரரையன் | சென்னாண்டார் (சென்னியாண்டார் ?) |
| 62. | சேதிராயன் | சேதிராயர் |

| | | |
|---|---|---|
| 63. | சொரப்பரையன் | சொரப்பரையர், சொரப்பளிங்கியார் |
| 64. | சோழங்கத் தேவன் | சோழங்கத்தேவர் |
| 65. | சோழப்பிரியன் | சோழப்பிரியர் |
| 66. | சோழ முத்தரையன் | செம்பிய முத்தரையர் |
| 67. | சோழகங்கன் | சோழங்கர் |
| 68. | சோதிரியக்கிரமவித்தன் | சோதிரியர் |
| 69. | தனஞ்சயராயன் | தனஞ்சராயர் |
| 70. | துறவாண்டை | துறையுண்டார் |
| 71. | தென்னாட்டரையர் | தென்னதிரையர் |
| 72. | தொண்டைமான் | தொண்டைமான் |
| 73. | நந்தியர், நந்தியரையர் | நந்தியர், நந்தியராயர் |
| 74. | நாட்டான் | நாட்டார் |
| 75. | நாட்டரையன் | நாட்டரையர் |
| 76. | நாயக்கர் | நாயக்கர் |
| 77. | நெடுவையுடையான், நெடுவாயிலுடையன் | நெடுவாண்டார் |
| 78. | பட்டாளம் | பத்தாளர் |
| 79. | பனங்காடன் | பனங்கொண்டார் |
| 80. | பருத்தியுடையான் | பருத்திகொண்டார் |
| 81. | பல்லவராயன் | பல்லவராயர் |
| 82. | பல்லவாண்டான் | பல்லவாண்டார் |
| 83. | பன்றிமங்கலம் உடையான் | பன்றி கொண்டார் |
| 84. | பாண்டியதரையர், பாண்டியராயர் | பாண்டுராயர், பாண்டியராயர் |
| 85. | பிச்சாண்டான் | பிச்சாடியார் |

| | | |
|---|---|---|
| 86. | புறம்பியன் | புறம்பயத்தார் |
| 87. | பொய்கை நாடுகிழவன் | பொய்யுண்டார் (பொய்கையாண்டார்) |
| 88. | போயிந்தான் | போய்ந்தராயர் |
| 89. | மட்டையாண்டான் | மட்டையாண்டார் |
| 90. | மண்டலராயன் | மண்டராயர் |
| 91. | மண்ணை | மண்ணையார் |
| 92. | மண்ணை கொண்ட சோழப் பல்லவராயன் | மண்(ணை) கொண்டார் |
| 93. | மழவராயன் | மழவராயர் |
| 94. | மணவாள முத்தரையன் | மணவாளர் |
| 95. | மேனாட்டுடையான், மயனாதரையன் | மேனாட்டரையர் |
| 96. | மலையமான் | மலையராயர் |
| 97. | மல்லிகிழான் | மல்லி கொண்டார் |
| 98. | மழுவாடி | மழுவாடியார் |
| 99. | மகாபலி வாணாதிராயன் | மாவலியார், வாணாதிராயர் |
| 100. | மங்கல நாடாள்வான் | மங்கலத்தார் |
| 101. | மாந்துறை | மாந்தராயர் |
| 102. | மாதயன் | மாதையாண்டார் |
| 103. | மாதவராயன் | மாதவராயர் |
| 104. | மாத்துளான் | மாத்துளார் |
| 105. | மாமணக்களமுடையார் | மாமணக்காரர் |
| 106. | மானதொங்கலார் | மானவிழுங்கியார் |
| 107. | முனையதரையன் | முனையதிரியர் |
| 108. | முடிகொண்டான் | முடிகொண்டார் |

| | | |
|---|---|---|
| 109. | வங்காரமுத்தரையன் | வங்காரமுத்தரையர் |
| 110. | வண்டையத்தேவர் | வாண்டையார் |
| 111. | வன்னி | வன்னியர் |
| 112. | வல்லவராயன் | வல்லவராயர் |
| 113. | வல்லங்கிழான் | வல்லத்தரசு |
| 114. | வழிக்காவன் | வழியார் |
| 115. | வாளாடி | வாள் வெட்டியார், வாயாடியார் (வாளாடியார்?) |
| 116. | வாட்டாக்குடி, வாட்காமணி | வாட்டாட்சியார் |
| 117. | விசயராயன் | விசுவராயர் |
| 118. | வில்லவராயன் | வில்வராயர் |
| 119. | விசலூர் | விசலாண்டார், பிசலண்டார் |
| 120. | வீணாட்டரையன் | வீணதரையர் |
| 121. | வேண உடையார் | வேணுடையார் |
| 122. | வைராடராயன் (வைராகராயன் | வையராயர் |
| 123. | ராராதேவன் | ராராண்டார் |

## உயர்திரு. மூ. சுவாமிநாத உபாத்தியாயரின்

# "சூரியகுலக் கள்ளர் சரித்திரம்" நூலில் குறிக்கப்பெற்றுள்ள கள்ளர்கள் பட்டப் பெயர்களின் பட்டியல்

THE TANJAVUR MAHARAJA SERFOJI'S ... LIBRARY
22 MAR 1988

| | பக்கம் |
|---|---|
| அரசன் | 41 |
| அரசுடையன் (அரசுக்குடையன், அரசுக்குழைச்சான், அரச்சுக்குழைச்சான்) | 41, 72 |
| அரசாண்டான் | 41, 72 |
| அரசாளன், அரசாளி, அரசாட்சி, அரசுப்பிரியன், அரசுகொண்டான், அரசதேவன் | 41 |
| அச்சுதன் (அச்சுதபண்டாரம்) அச்சுததேவன் (அச்சுத்தேவன்) | 43, 94 |
| அம்பராண்டான் (அமரண்டான்) அம்பர்த்தேவன் (அம்மலத்தேவன்) | 43, 99 |
| அம்மையத்தரையன் (அசையாத்துரையன்) | 44, 104 |
| அத்திரியன், அத்திரியாக்கி (அத்திரிமாக்கி), அத்திப்பிரியன் | 44, 109 |
| அரியதன், அரிப்பிரியன் (அரியப்பிள்ளை) | 44, 112 |
| அண்டப்பிரியன் (அண்ணுப்பிரியன், அண்ணுத்திப்பிரியன்), அண்டங்கொண்டான் (அண்ணுண்டான்) | 44, 114 |
| அடைக்கப்பட்டான், அடைவளைந்தான் | 45, 120 |
| அன்னவாயில்ராயன் (அன்னவாசல்ராயன்) | 45, 122 |

அருண்மொழிதேவன் (அருமொழிதேவன்) 46, 152
அதியமான், அதிகமான் 46, 205
அருவாத்தலைவன் (அருவாத்தலையன்),
அருவாநாடன் (அருமை நாடான், அருமடான்)
அருவாநாட்டான் (அருமநாட்டான்) 47, 207
ஆச்சன், ஆச்சராயன், ஆச்சுடையன், ஆச்சாண்டான், 41
ஆச்சாளன், ஆச்சாளி,
ஆச்சாப்பிரியன் (ஆட்சிப்பிரியன்) 41, 72
ஆச்சங்கொண்டான், ஆச்சதேவன் 41
ஆயப்பிரியன் (ஆளற்பிரியன்) 43, 91, 92
ஆரக்கண்ணியன் 43
ஆரம் பூண்டான் (ஆரமுண்டான்)
ஆரஞ்சுற்றி (ஆரச்சுத்தி) 43, 95
ஆதனழிசி (ஆதாழி) 43, 126
ஆலத்தரையன் (ஆவத்தயன்),
ஆலங்கொண்டான் (ஆலத்தொண்டான்),
ஆலப்பிரியன் (ஆளம்பிரியன்) 45, 127
ஆக்காட்டரையன் (ஆக்காட்டியன்) 46, 138
இருங்களன் (இருங்கள்ளன்) 47
இராயன் (இராங்கியன்),
இராயங்கொண்டான் (இராயமுண்டான்),
இராயாளி (இராசளி),
இராயப்பிரியன் (இராசப்பிரியன், இராங்கிப்பிலியன்) 41, 73
இராயாண்டான், இராயாளன், இராயதேவன் 41
இடங்காப்பிறந்தான் 42, 80
இறையாண்டான் (இராரண்டான்) 43, 98
இளங்கொண்டான் (இளமுண்டான்) 45, 133
ஈச்சங்கொண்டான் (ஈங்கொண்டான்) 45, 122

ஈழத்தரையன், ஈழங்கொண்டான் 46, 201

உறந்தைராயன் 41, 75

உறந்தையுடையன், உறந்தையாண்டான்,
உறந்தையாளன், உறந்தையாளி, உறந்தையாட்சி,
உறந்தைப்பிரியன், உறந்தைகொண்டான் 41

உலகுடையன், உலகங்காத்தான் 45, 121

உய்யக்கொண்டான் 46, 152

உத்தமாண்டான் (உத்தமண்டான்),
உத்தமங்கொண்டான் (உத்தமுண்டான்),
உத்தமப்பிரியன் (யுத்தப்பிரியன்) 46, 168

உழுவுடையன் 42

உழுவாண்டான் (உழுவண்டான்) 42, 77

உழுவாளன், உழுவாண்டான் (உழுவண்டான்),
உழுவாளன், உழுவாளி, உழுவாட்சி
உழுப்பிரியன், உழுக்கொண்டான் 42

ஊமத்தரையன், ஊமத்தநாடான் (ஊரத்திநாடான்) 47, 208

ஊமத்தயன் (ஊரத்தியன்),
ஊமப்பிரியன் (ஊரான்பிலியன்) 47

ஏனாதிகொண்டான் (ஏத்தொண்டான்),
ஏனாதிப்பிரியன்
(ஏத்திப்பிரியன், எத்திப்பிரியன், ஏத்திரிப்பிரியன்) 45, 128

ஏனாதிநாட்டுப்பிரியன்
(ஏனாட்டுப்பிரியன், என்னாட்டுப்பிரியன்) 45

ஒளிராயன், ஒளியுடையன் 41, 75

ஒளியாண்டான், ஒளியாளன், ஒளியாளி, ஒளியாட்சி 41

ஒளிப்பிரியன் (ஒண்டிப்பிலியன்), ஒளிகொண்டான் 42, 75

ஒற்றையன் 43, 101

ஓமாந்தரையன் (ஓந்தரையன், ஓந்திரியன்),
ஓமா மரையன்
(ஓமசையன், ஓமஞயன், ஓசையன், ஓஞயன்) 41, 73

ஓமாமுடையன் (ஓட்டம்பிடிக்கியன்) 41

ஓமாம்பிரியன் (ஓயாம்பிலியன்) 41, 73

ஓடம்போகி (ஓட்டம்பிடிக்கி) 45, 120

ஐயப்பிரியன் (ஐரைப்பிரியன்) 45, 119

கண்டியர் 6

கண்டியன் 43, 97

கண்டப்பிள்ளை 7, 45, 126

கருக்கொண்டான் (கருப்பூண்டான்),
கருப்பையன் (கருப்பட்டியன்),
கருஊரான் (கருப்பூரான்) 41, 75

கருவுடையன், கருவாண்டான், கருவாளன்,
கருவாளி, கருவாட்சி, கருப்பிரியன் 41

கஞ்சராயன் (கஞ்சன்) 42, 78

கரும்பூரான் 42, 80

கரும்புடையன், கரும்பாண்டான், கரும்பாளன்,
கரும்பாளி, கரும்பாட்சி, கரும்புகொண்டான் 42

கன்னமுடையான் (கன்னப்படையன்) 42, 81

கன்ஞண்டான், கன்ஞளன், கன்ஞளி, கன்ஞட்சி,
கன்னப்பிரியன், கன்னகொண்டான், கன்னதேவன் 42

கலயன் 42, 81

கரம்பையன்,
கரம்பைகொண்டான் (கரமுண்டான்) 42, 83

கச்சிராயன் 43, 92

கத்திரியன் (கத்தூரியன்),
கத்தரிகொண்டான் (கத்தூரிமுண்டான்),
கத்தரி நாடன் (கத்திநாடன்) 43, 93

கலிராயன் 45

கலியன், கலியாட்சி (கலிச்சி) 45, 121

கடம்பன், கடம்பையன்,
கடம்பராயன், (கடம்பரான்) 45, 124

கண்டன்
கண்டராயன், (கண்டவராயன்)
கண்டர் கிள்ளி (கண்டர்சில்லி)
கண்டப்பிரியன், (கண்டப்பிள்ளை) 45, 126

கங்கன், கங்கைராயன்
கங்கைநாடன், (கங்கநாடான்) 46, 152

கடாரத்தலைவன் (கடாத்தலையன்), கடாரந்தாங்கி 46, 171

கன்னக்குச்சிராயன் (குச்சிராயன்) 46, 175

கலிங்கராயன் (காலிங்கராயன், காலிங்கராயர்) 46, 185, 9

களப்பாளன் (களப்பளான்)
களப்பாளி (களப்பாடி) 46, 206

களந்தையாண்டான் (களந்தண்டான்) 46, 47, 206

களன் (களாவன்) 47, 206

களத்துவென்றான் (தெத்துவெண்டான்) 47, 206

களமுடையன்
(களக்குடையன், கக்குடையன், களக்கடையன்,
கிளாக்கடையன், கிளாக்கட்டையன், கிளாக்கன்) 47, 206

கருடி (கரடி) 47, 212, 213

கார்யோகன், கார்யோகராயன், காருடையன்,
காராண்டான், காராளன்) 40

காராட்சி (காரையாட்சி, காரைக்காச்சி) 40, 68

கார்ப்பிரியன், கார்கொண்டான் 40

காரி 42, 82

காசிராயன், காசிநாடன் 42, 83

| | |
|---|---|
| காவலகுடியன் (காலாக்குடியன்) | 43 |
| காவலாளி (காவாலி, காலாடி, காவாடி) | 43, 99 |
| காடுவெட்டி | 43, 100 |
| காங்கயன் (காங்கியன்) | 44, 109 |
| காவிரிவெட்டி (காவெட்டி) | 44, 110 |
| காடவராயன் | 46, 156 |
| கிள்ளி (கிளாக்கன்)<br>கிள்ளிகொண்டான் (கிளிகண்டான்)<br>கிள்ளிராயன் (கிளிராயன்)<br>கிள்ளியாண்டான் (கிளியண்டான்) | 45, 126 |
| கீழையன், கீழுடையன் | 42 |
| கீழாண்டான்<br>(கீழண்டான், கீழாளன், கீழாளி, கீழாட்சி,<br>கீழப்பிரியன், கீழ்க்கொண்டான்) | 42, 80 |
| கீரரையன் (கீரையன், கீரைக்கட்டையன்)<br>கீரமுடையன் (கீருடையன்) | 43, 93 |
| குறுக்கையன், குறுக்குடையன் | 42 |
| குறுக்கையாண்டான்<br>குறுக்காண்டான் (குறுக்கண்டான்) | 42, 78 |
| குறுக்காளன், குறுக்காளி, குறுக்காட்சி,<br>குறுக்கைப்பிரியன், குறுக்கொண்டான் | 42 |
| குண்டையன் (கொன்றையன்) | 43, 101 |
| குழந்தைராயன் | 45, 107 |
| குமாராண்டான் (குமரண்டான்) | 44, 108 |
| குளந்தைராயன் (கொழுந்தைராயன்) | 45, 130 |
| கூழையன், கூழாக்கி | 43, 92 |
| கூத்தப்பராயன் (கொத்தப்பராயன்) | 43, 99 |

கூரராயன் (கூரராசன், கூர்சான்) 44, 116

கொற்றரையன், கொற்றுடையன், கொற்றாண்டான்,
கொற்றாளன், கொற்றாளி, கொற்றாட்சி 42

கொற்றப்பிரியன் (கொத்தப்பிரியன்)
கொற்றங்கொண்டான் (கொன்னமுண்டான்) 42, 76

கொங்கணன் 46, 152

கொடிகொண்டான் (கொடிக்கமுண்டான்)
கொடிராயன் (கொடிக்கிராயன், கொடிக்கவிராயன்)
கொடியாளன் (கொடிபாலன்) 46, 160

கொடும்பன், கொடும்பையன், கொடும்பைராயன்,
கொடும்பையரையன்,
கொடும்பைப்பிரியன்
(கொடும்புலியன், கொடுப்புலியன், கொடும்பிரியன்) 47, 207

கொல்லத்தரையன், கொங்கரையன் 46, 170

கோபாலன், கோபாலர் 2, 46, 142

கோட்டரையன்,
கோட்டையாண்டான் (கொட்டையண்டான்) 44, 103

கோழியன் (கோழயன்) 44, 114

கோனேரிகொண்டான் (கொன்னமுண்டான்)
கோனேரிப்பிரியன் (கோதண்டப்பிரியன்) 46, 199

கோட்டைசுருட்டி, கோட்டைமீட்டான் 46, 201

சமயன்
சமயாளி (சவுளி, சவுட்டி, சமட்டி) 42, 82

சக்கரன் (சக்கரை), சக்காராயன் (சக்கராயன்)
சக்கரநாடன்
(சக்கரையப்ப நாடாள்வான், சக்கரநாட்டான்) 43, 99

சந்திரங்கொண்டான், சந்திரதேவன் (சம்பிரதேவன்) 44, 117

சயங்கொண்டான் (சேங்கொண்டான்) 46, 163

சங்கரன், சங்கரராசன்
சங்கரதேவன் (சங்கத்தியன்) 46, 198

சம்பிரதி 47, 212

சாத்தயன் (சாதகன்)

சாத்தரையன் (சாமுத்தரையன், சாமுத்திரியன்) 42, 77

சாளுவன் 45, 120

சாளுக்கியன் 46, 169

சித்தாட்சி (சிற்றாட்சி) 44, 112

சிறுராயன் (சிறுநாட்டுராயன்)

சிறுநாடன் (சிறுமடான்)

சிறுப்பிரியன் (சிலுப்பி) 45, 127

சிங்கிளராயன் (சிங்களான்)

சிங்களப்பிரியன் (சிங்கப்பிலியன்)

சிங்களாளி (சிங்காரிக்கன்) 46, 167

சீனத்தரையன் 46, 171

சுந்தரராயன் (சுந்தன், சுன்றையன்) 46, 174

சூரக்கோட்டையன் (சுரக்குடையன்)

சூரப்பிரியன் (சுரப்பிடுங்கியன்) 45, 135

சூரியன் 39

செம்பியன் (செம்பன்) 42, 85

செம்பியரையன் (செம்பரையன், செம்படையன்)

செம்பியத்தரையன்

(செம்பியமுத்தரையன், செம்பியமுத்தரசு,

செம்பியமுத்திரியன் 43, 85

செட்டி 42

சேண்டப்பிரியன் 7, 45, 129

சேய்ஞலரையன் (செம்மைக்காரன்) 41, 74

சேய்ஞலாண்டான், சேய்ஞலாளன்,

சேய்ஞலாளி, சேய்ஞலாட்சி 41

சேய்ஞற்பிரியன் (சேய்ப்பிளன்)

சேய்ஞற்கொண்டான் (செம்மைகொண்டான்) 41, 74

சேணராயன் (செனவராயன்)
சேணரையன் (சாணரையன்)
சேணன் (சாணன், சாணை)
சேண்கொண்டான்
(சேனக்கொண்டான், சேனைகொண்டான்)
சேணுண்டான் (சென்னண்டான்)
சேண்பிரியன் (சேண்டப்பிரியன்)
சேணுடன் (சேனைநாடான், சென்னுடான்) 45, 129
சேந்தராயன் (சிந்துராயன்) 46, 139
சேந்தமுடையன் (சேந்தமடையான்) 46
சேதிராயன் (சேதிரான், சேதுரான்) 47, 209
சேதிநாடன் (சேதுநாடான்) 47
சேனைத்தலைவன் (சேனைத்தலையன்) 47, 212, 213
சேனாதிபதி (சேனாபதி, சேனாதி, சேனாதிபன்) 47, 152, 212
சொக்கராயன் (சுக்கிரன்) 45, 121
சோணையன்
சோணாடுகொண்டான் (சோணுருண்டான்) 42, 82
சோழன் (சோழவன்)
சோழரையன் (சோழதரையன், சோழதிரியன்,
சோதிரையன்), சோழராசன் (சோமராசன்)
சோழநாயகன் (சோமநாயக்கன், சோமணநாயக்கன்)
சோழாட்சி (சோமாசி)
சோழதேவன் (சோமதேவன்)
சோழகோன் (சோழகன்)
சோழப்பிரியன்
சோழநாடன் (சோமநாடான்) 44, 108
சோழங்கொண்டான் 44
சோழபாண்டியன் (பாண்டியன்) 46, 163
சோழகங்கன் (சோழங்கன்)
சோழகங்கதேவன் (சோழங்கதேவன்)
சோழகங்கநாடன் (சோழங்கநாடான்) 46, 166

சோழசனகராசன் (சனகராயன்) 46

தலையன் 40

தலைராயன்
(தலைசைராயன், தனசைராயன், தனராயன்) 40, 66

தளியன், தளிராயன், தளியுடையான், தளியாண்டான்,
தளியாளன், தளியாளி, தளியாட்சி, தளிப்பிரியன்,
தளிகொண்டான், தளிநாடன் 40

தக்கோலன்,
தக்கோலாட்சி (தாக்கலக்கி) 45, 122

தஞ்சைராயன் (தஞ்சிராயன்) 45, 133

தண்டநாயகன்,
தண்டத்தலைவன் (தண்டத்தலையன்) 47, 212, 213

தாளியன் (தாளிதியன்) 40, 71

தானைத்தலைவன், (தானைத்தலையன்)
தானதிபதி (தானபதி, தானதி, தானதிபன்) 47, 152, 212

திராணி 46, 175

திருகட்டியன் (திருக்காட்டியன்) 47, 212, 213

துறையாண்டான் (துறவாண்டான்) 43, 91

துண்டன் (தொண்டன்)
துண்டயன் (தொண்டையன்)
துண்டராயன் (துண்டுராயன்) 44, 104

தெலிங்கராயன், தெலிங்கதேவன் 44, 106

தென்னன் 45, 137

தென்னவராயன் 45, 46, 137

தென்னரையன்,
தென்கொண்டான்
(தெங்கொண்டான், தெங்கண்டான், தெங்கிண்டான்)
தென்னப்பிரியன் (தின்னப்பிரியன், திண்ணப்பிரியன்) 46, 137

தேவன் 39, 64

தேவராயன் (தேசிராயன்) 39

தேவாண்டான் (தேவண்டான்) 39

தேவாளன், தேவாளி, தேவாட்சி 39

தேவப்பிரியன், தேவுடையன், தேவுகொண்டான் 40

தொண்டைமான், தொண்டையன்
தொண்டைப்பிரியன் (தொண்டாப்பிரியன்) 46, 153

நன்னியன் (நயினியன்) 42, 76

நள்ளிப்பிரியன் (நல்லிப்பிரியன்) 42, 81

நரசிங்கன் (நரங்கியன்)
நரசிங்கப்பிரியன் (நரங்கிப்பிலியன்) 42, 83

நந்தியன் (நந்தன்) 43, 92

நாகன் (நாயக்கன்), நாகராயன்,
நாகுடையன், நாகாண்டான், நாகாளன் 40

நாகாளி (நாக்காடி, நாவிளங்கி) 40, 68

நாகாட்சி, நாகப்பிரியன், நாகங்கொண்டான்
நாகநாடன், நாகதேவன் 40

நாணசிவன் (நாணசேவன்) 43, 97

நார்த்தேவன் (நார்த்தவான்) 43

நாடன் (நாடான், நாடாள்வான்)
நாட்டரையன் (நாட்டரசன், நாட்டான்) 46, 152

நீலங்கொண்டான் (நெறிமுண்டான்) 42, 45, 76, 127

நெல்லியன், நெல்லிராயன், நெல்லியுடையான்,
நெல்லியாண்டான், நெல்லியாளன், நெல்லியாளி,
நெல்லியாட்சி 41

நெல்லிப்பிரியன் (நல்லிப்பிரியன்) 41, 73

நெல்லிகொண்டான், நெல்லிதேவன் 41

நெடுவாண்டான் (நெடுவண்டான்)
நெடுவாளி (நெடுங்காளி)
நெடுந்தரையன் (நெடுத்தன், நெடுத்தார்)
நெடுங்கொண்டான் (நெடுமுண்டான்,
நெறிமுண்டான்) 45, 127

பழையாற்றான் (பழத்தான், மாம்பழத்தான்)
பழையாற்றரையன் 40, 67

பழைசையுடையன், பழைசையாண்டான், பழசையாளன்,
பழசையாளி, பழசையாட்சி, பழசைப்பிரியன் 40

பழைசைகொண்டான்
(பழங்கொண்டான், பழனங்கொண்டான்)
பழையாறுகொண்டான் (பழங்கண்டான்) 40, 67

பழைசைநாடன் 40

பனையன் (பன்னையன்) 40, 71

பனைராயன், பனையுடையன், பனையாண்டான்,
பனையாளன், பனையாளி, பனையாட்சி, பனைப்பிரியன் 40

பனைகொண்டான் (பன்னிகொண்டான்,
பண்ணிகொண்டன், பன்றிகொண்டான்,
பண்ணிமுண்டான், பணிகொண்டான்,
பணிபூண்டான் 40, 71

பனைநாடன், பனையதேவன் 40

பருதியன், பருதிராயன், பருதியுடையன்,
பருதியாண்டான், பருதியாளன், பருதியாளி, பருதியாட்சி 40

பருதிப்பிரியன் 40

பருதிகொண்டான் (பருத்திகொண்டான்) 40, 71

பருதிநாடன், பருதிதேவன் 40

பத்தாளன் 41, 74

பத்தாண்டான், பத்தாளி 41
பத்தாட்சி, (பெத்தாச்சி) 41, 74

பத்துடையன், பத்துகொண்டான் 41
பட்டுராயன் (பவட்டுரான்) 42, 79
பட்டுடையன், பட்டாண்டான், பட்டாளன், பட்டாளி,
பட்டாட்சி, பட்டுப்பிரியன், பட்டுகொண்டான் 42
பராங்கிலிராயன் (பரங்கிராயன்) 43, 95
பயிற்றுராயன் (பதுங்கரான்) 43, 98
பஞ்சநதரையன் (பஞ்சரையன்) 44, 110
பசுபதி (பசும்படி) 44, 113
பல்லவன் 46, 155, 171
பல்லவராயன், பல்லவாண்டான் 46, 155
படைத்தலைவன் (படைத்தலையன்)
படையாட்சி (படையெழுச்சி) 47, 152, 212, 213
பாச்சிலாளி (பிச்சாடி) 82
பாப்பரையன், பாப்புடையன், பாப்பிரியன்,
பாப்புவெட்டி (பாப்புரெட்டி) 44, 109
பாண்டராயன் 44, 111
பாம்பாளி (பம்பாளி, வம்பாளி) 44, 117
பாலையன் (பாலியன்)
பாலைராயன் (பால்ராயன்)
பாலையாண்டான் (பாலாண்டான்)
பாலையுடையன் (பாலுடையன், பாவுடையன்)
பாலைநாடன் (பானுடன்)
பாலைநாட்டான் (பானுட்டான்) 45, 123
பிச்சயன் 43
பிச்சாளி (பிச்சாடி) 42, 82
பிரமன் 43, 95
பெரியாட்சி (பெரிச்சி) 45, 123

புறம்பயத்தான் (பொறைபொறுத்தான், பொய்ந்தான்)
புறம்பயங்கொண்டான் (பொய்கொண்டான்) 6, 40, 65

புறம்பயாண்டான், புறம்பயாளன், புறம்பாயளி,

புறம்பயாட்சி, புறம்பயப்பிரியன், புறம்பயமுடையன் 40

புறம்பயன் (பொறையன்) 40, 65

புள்ளராயன் 43, 91

புத்திகழிந்தான் (புற்றில்கழிந்தான்) 44, 112

புன்னாகன் (புண்ணாக்கன்)
புன்னேயன் (பூனேயன்) 43, 94

புன்னேகொண்டான் (பின்னுண்டான்) 43

புலிராயன்
புலிகொண்டான் (பிலிமுண்டான்)
புலிக்கொடியன் (புலிக்குட்டியன்) 44, 116

புலிக்கொடியோன் 44
பூவன், பூவுடையன், பூவாண்டன்,
பூவாளன், பூவாளி 42

பூவாட்சி (பூட்சி, திருப்பூட்சி) 42, 77

பூப்பிரியன், பூக்கொண்டான் 42

பூதரையன் (போதரையன்) 45, 119

பூக்கட்டி 46, 169

பூழிராயன்
பூழிநாடன் (பூழிநாடான்) 47, 208

பூழியர்பிரான் (பூழியூரான்) 46, 185

பேரரையன் (பேதரையன்) 45, 124

பொன்னங்கொண்டான் (பொன்னமுண்டான்)

பொன்னுண்டான் (பொன்னுப்பூண்டான்) 44, 118

பொன்னுளி (பொன்னானி) 45, 118

| | |
|---|---|
| போரிற்கொளுத்தி (போரைக்கொளுத்தி) | 46, 163, 173 |
| போரிற்பொறுக்கி (பொரிப்பொறுக்கி) | 46, 171 |
| போரிற்சுற்றி (போரைச்சுற்றி) | 46, 175 |
| போர்க்கட்டியன் (போர்க்காட்டி, போர்மூட்டி) | 47, 212 |
| மல்லிகொண்டான் | 6, 44, 105 |
| மண்ணிராயன் (மணிக்கராயன்)<br>மண்ணியன் (மண்ணையன், மணியன்) | 44, 113 |
| மண்கொண்டான்<br>(மங்கொண்டான், மங்கண்டான்) | 6, 42, 84 |
| மண்வெட்டிக்கூழ்வாங்கி<br>(மண்வெட்டியில்கூழ்வாங்கி) | 43, 92 |
| மண்டலராயன் (மண்டராயன்) | 42, 84 |
| மணவாளன் | 40, 66 |
| மங்கலன் | 41, 74 |
| மங்கலராயன், மங்கலாண்டான், மங்கலாளன்,<br>மங்கலாளி, மங்கலாட்சி, மங்கலப்பிரியன்<br>மங்கல்கொண்டான் | 41 |
| மங்கலதேவன் (மங்கதேவன்) | 41, 74 |
| மங்கலநாடன் | 41 |
| மருங்கராயன் (பருங்கைராயன், கைராயன்) | 42, 77 |
| மலைராயன் (மலையரான்) | 43, 91 |
| மழவன் | 43 |
| மழவராயன் (மழவராயர்) | 9, 43, 94 |
| மழவாளி (மழுவாடி) | 43, 94 |
| மழநாடன் | 43 |
| மன்னயன் (மன்னியன்) | 43, 94 |

| | |
|---|---|
| மயிலாண்டான் (மயிலண்டான்) | 44, 117 |
| மால் | 39 |
| மாலையிட்டான் | 4, 43, 95 |
| மாங்காடன் | 40 |
| மாங்காட்டான் | 40, 65 |
| மாவாண்டன், மாவாளன், மாவாளி, மாவாட்சி, | |
| மாப்பிரியன், மாவுடையன், மாகொண்டான், மாநாடன் | 40 |
| மானங்காத்தான், மானத்தரையன் (மானமுத்தரையன்) | 42, 83 |
| மானம்விழுங்கி (மானமுழுங்கி) | 42, 83 |
| மாதவராயன் | 43 |
| மாதராயன் (மாதுராயன், மாத்துராயன்) | |
| மாதையன் (மாதயன்) | |
| மாதையாண்டான் (மாதயாண்டான்) | 43, 102 |
| மாந்தையரையன் (மாந்தரையன்) | 45, 121 |
| மாவெற்றி (மாவெட்டி) | 46, 152 |
| மாவலி | 46, 154 |
| மாளிகைசுற்றி (மாளிச்சுத்தி, மான்சுத்தி) | 47, 212 |
| மின்கொண்டான் | 43 |
| மின்னுளி | 43, 100 |
| முனையரையன் (முனைதரையன்) | 47, 210 |
| முனையரையர் | 3, 7, 8 |
| முனையதரையன் (முனைதிரியன்) | 47, 210 |
| முனையாளி (முனுக்காட்டி) | 47, 210 |
| முனைகொண்டான் (முண்டான்) | 46 |
| முதலி | 40, 66 |
| முடியைக்கொண்டான் | 46, 201 |

மூவரையன் (மூரியன், மூங்கிலியன்) 46, 145

மேல்கொண்டான் (மேற்கொண்டான்) 3, 6, 43, 44, 103

மேனாட்டுராயன், மேனாட்டரையன்,
மேனாட்டுத்தேவன் (மெட்டத்தேவன்)
மேனாடன் (மெனக்கடன்) 43, 103

வங்கன் (வங்கணன்)
வங்கத்தரையன் (வங்காரமுத்தரையன்,
வங்காரமுத்திரியன்)
வங்கராயன் (அங்கராயன், அங்கரான்) 43, 85

வண்டன்
வண்டயன் (வாண்டையான்)
வண்டப்பிரியன் (வாண்டாப்பிரியன்)
வண்டதேவன் 43, 93

வடுகராயன் (வடுராயன்) 43, 93

வன்னியன்
வன்னிகொண்டான் (வண்ணிமுண்டான்) 43, 102

வல்லத்தரையன், வல்லமாண்டான்,
வல்லாண்டான் (வல்லண்டான்)
வல்லாளதேவன்,
வல்லாளி (வல்லாடி, வல்லிடி) 44, 105

வழுவாளி (வழுவாடி) 44, 106

வளவன் (வளம்பன்) 44, 113

வாளமரன், வாள்ராயன், வாளுடையன், வாளாண்டான்,
வாளாளன், வாளாளி, வாளாட்சி, வாட்பிரியன்,
வாட்கொண்டான் 41

வாள்வெட்டி (வாளால்வெட்டி) 41, 72

வாட்டாட்சி (வாட்டாச்சி, வாச்சி, வாச்சான்) 43, 102

வாவுடையன், வாயாண்டான், வாயாளன் 42

வாயாளி (வாயாடி) 42, 81

வாயாட்சி 42

வாப்பிரியன் (வாப்பிலியன்) 42, 81

வாலியன், வாலிராயன் 45, 128

வாணரையன் (வாணதரையன், வாணதிரியன்,
வாணாதரையன், வாணாதிரியன்,
வீணுதரையன், வீணுதிரியன் 44, 104
வாஞ்சிராயன் (விஞ்சிராயன்) 44, 118

விசலன், விசலராயன், விசலுடையன் 40

விசலாண்டான் (விசலண்டான், பிசலண்டான்,
வீசண்டான்) 40, 72

விசலாளன் 40

விசலாளி (விச்சாடி) 40, 41, 72

விசலாட்சி, வீசலப்பிரியன் 41

விசல்கொண்டான் (விசலுண்டான், பிசலுண்டான்) 41, 72

விசல்நாடன், விசல்தேவன் 41

வில்லன், வில்லவராயன் 43, 98

விசராயன் (விசுவராயன்)
விசயதேவன் (விசாதேவன்) 44, 106

விளப்பன் (விற்பனன்) 44, 112

விக்கிரமத்தான், விக்கிரமத்தரையன் 46, 145

விருதராசபயங்கரன் (விருதலான்) 46, 152, 185

விட்டுணன் (விற்பனன்) 100

வீரப்பிரியன் (வீர்ப்பிலியன்)
வீரங்கொண்டான் (வீரமுண்டான்) 44, 105

வெள்ளங்கொண்டான் 44, 118

வெட்டுவராயன் (வெட்டுவன்) 45, 119

வெண்டன் (வென்றுன்) 45, 122

| | |
|---|---|
| வேள், வேள்ராயன் | **40** |
| வேளுடையன், வேளுரன் | 40, 66 |
| வேளாண்டான், வேளாளன், வேளாளி, வேளாட்சி, வேட்பிரியன், வேட்கொண்டான், வேணுடன் | 40 |
| வேணுடையன் | 43, 95 |
| வேம்பன் | 43 |
| வேங்கைராயன் (வேங்கிராயன்) | 42, 77 |
| வைகராயன் (வயிராயன், வயிரவன்) | 42, 76 |


யு. சுப்ரமணியன்

14—7—87.